
இயேசு உங்களை ஆசீர்வதிப்பார்.

# For Two Wheeler

## "8" To Practice

## "8" பயிற்சி அளித்தல்



## ஓட்டுநர்களே சாலையில் பாதுகாப்பாகச் செல்ல வேண்டுமா ?

1. சாலை விதிகளை கடைப்பிடிக்கவும்.
2. போக்குவரத்து சின்னங்களை மதிக்கவும்.
3. காவலர் கைசைகைக்கு கட்டுப்படவும்.
4. முந்திச் செல்லும் வாகனத்தின் மீது கவனம் தேவை.
5. எதிரே வரும் வாகனத்தின் மீது கவனம் தேவை.
6. பாதுகாப்பிற்கு போதிய இடைவெளி விட்டுச் செல்லவும்.
7. இரவில் எதிரில் வாகனம் வரும்போது ஒளியை குறைக்கவும்.
8. சாலையின் தன்மைக்கேற்ப வேகத்தை குறைத்துச் செல்லவும்,
9. பாதசாரிகள் மீது கவனம் வைத்துச் செல்லவும்.
10. பாதுகாப்பான வேகத்தில் செல்லவும்.
11. சாலையில் பாதி, எதிரில் வரும் வாகனத்திற்குரியது.
12. சாலையில் உள்ள மஞ்சள் மற்றும் வெள்ளை கோடு தடுப்பு சுவர் போன்றதாகும்.

**வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தில் இருந்து உங்களுக்கு உதவிகள் வரும்.**

# பொதுப்பணி ஓட்டுநர்களுடைய கடமைகள்

1. புகை பிடித்தலும், மது அருந்துதலும் கூடாது.
2. பயணிகளிடத்தில் மரியாதையாகவும், அன்பாகவும் நடக்க வேண்டும்.
3. தூய காக்கி அரைக்கை சட்டையும், காக்கி பேண்டும் அணிந்திருக்க வேண்டும்.
4. வாகனத்தை சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் வைத்து இருக்க வேண்டும்.
5. தன் வாகனத்தில் ஏறுமாறு பயணியை வேண்டக்கூடாது. மற்ற வாகனத்தில் ஏறுபவரை தடுக்க கூடாது.
6. பயணிகளை கவருவதற்காக சத்தமாக கூவக்கூடாது.
7. வீண்பொழுது போக்காமலும், கால அட்டவணையில் உள்ள நேரப்படி பயணத்தை தொடங்கி, சேரும் இடத்தை போய் சேர வேண்டும்.
8. நடத்துநர் இல்லாத பேருந்தில் ஓட்டுநர் நடத்துனரின் பணிகளை செய்ய வேண்டும்.
9. வாகனத்தை ஸ்டார்ட் செய்தவுடன் இன்ஜினை சிறிது நேரம் ஓட விட வேண்டும். ஆம்பியர் மீட்டர், ஆயில் மீட்டர் சரியாக இயங்குகிறதா என சரிபார்க்கவேண்டும்.
10. வளைவுகளில் கட்டாயம் வேகத்தை குறைத்த பின், திரும்ப வேண்டும்.
11. மலைப்பாதைகளில் ஏறும் வாகனத்திற்கு இறங்கும் வாகனம் வழி விட்டு, பிறகு செல்ல வேண்டும்.
12. அவசரகாலஊர்திகள், தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ் மற்றும் **VIP** வாகனங்கள் சாலையில் வரும் போது அவற்றிற்கு வழிவிட்டு, பின் நாம் செல்ல வேண்டும்.
13. மக்கள் நிறைந்துள்ள மற்றும் டிராபிக் உள்ள பகுதியில் கட்டாயம் மிகவும் வேகத்தை குறைத்து செல்ல வேண்டும் ஜனங்களையும் பொருட்களையும் பாதுகாக்க வேண்டும்.
14. டீசல் செலவை மட்டும் கருத்தில் கொண்டடு ஜனங்களையோ பொருட்களையோ சேதப்படுத்தம் அளவிற்கு வாகனம்
15. ஓட்டக்கூடாது, வேகதடை உள்ள இடத்தில் மிக மிக மெதுவாக செல்ல வேண்டும்.
16. நாம் மற்றவராகளுக்கும், தேசத்திற்கும் நன்மைகள் செய்ய பிறந்தவர்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

ஜீவனுள்ள தேவன் இயேசு, உங்களையும் உங்கள பிள்ளைகளையும் காப்பார்.

# எங்களது மார்வலஸ் கார் டிரைவிங் ஸ்கூலின் சிறப்பம்சங்கள்



















**999 455 3438, 962 962 8008, 80 154 63906, 88 258 28 298**



Rpm
Speeda Meter
Fuel
Head Lamp Switch
Wiper Switch
Hand Break
Fuel
Diesel Engine
Heater
Ign
CHECK ENGINE
Temp
Oil Stick
MARVELOUS JESUS CARS
Door
Engine Oil Light
Battery Charging
Indoor
Head Lamp
Parking Lamp
Hazard Light
Tail Light


LEFT TURN
4வது கியர்
RIGHT TURN
3வது கியர்
"U" TURN
1வது கியர்
"U" TURN
2வது கியர்
LEFT TURN
2வது கியர்
RIGHT TURN
1வது கியர்
சிறதாக
பிரேக்
சிறிதாக
பிரேக்
பாதி கிளச்
சிறிதாக
பிரேக்
பாதி கிளச்
சிறிதாக
பிரேக்
பாதி கிளச்
சிறிதாக
பிரேக்
இன்டிகேட்டர் போட வேண்டும்
250அடி
பிரேக் அழுத்த வேண்டும்
100அடி
2வது கியர்
போட வேண்டும்
50 அடி
பாதி கிளச் மற்றும்
சிறிதாக பிரேக்
PRAISE THE LORD
MARVELOUS CAR DRIVING SCHOOL
KARAIKUDI
பாதி கிளச் மற்றும்
சிறிதாக பிரேக்
3வது கியர்
கிளச்சை முழுவதுமாக விடவேண்டும்
ஆக்சிளட்டரை அழுத்தவேண்டும்
50 அடி
பாதி கிளச் மற்றும்
சிறிதாக பிரேக்

ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு
நான் உன்னை விடுவிப்பேன்   சங் 50:15

# மார்வலஸ்
# கார் டிரைவிங் ஸ்கூல்
## தொழில் நுட்ப நிறுவனம்






## Meaning of the "DRIVER"

**D- Discipline** - ஒழுக்கம் (நன்நடத்தை)

**R- Responsibility** - பொறுப்பு

**I - Intelligent** - அறிவுக்கூர்மை

**V- Vision** - பார்வை உடையவராக

**E- Eligibility** - தகுதிவாய்ந்தவர்

**R- Roadsense** - சாலை விதிகளுக்கு ஏற்ப ஓட்டும் அறிவு

**999 455 3438, 962 962 8008, 80 154 63906, 88 258 28 298**

கோபம் குறைப்பது உடலுக்கு ஆரோக்கியம்.
வேகம் குறைப்பது உயிருக்கும், வாகனத்திற்கும், தேசத்திற்கும் நல்லது.

# HAND SIGNAL　　கை சைகைகள்




வலது பக்கம் வரும்போது அல்லது வலதுபக்கம் திருப்பம் செய்யும் போதும், முந்தும் போதும், வலது கையை வெளியே நீட்டி உள்ளங்கை படத்தில் காட்டியபடி முன்புறம் இருக்க வேண்டும்.

When truning right or moving out to the right extend your right hand horizontally.

இடது பக்கம் வரும்போதும் இடது பக்கம் திருப்பம் செய்யும் போதும் வலது கையை நீட்டிமுன்னோக்கி வலமிருந்து இடதுபக்கம் வட்டமாகச் சுற்ற வேண்டும்.

When truning left or moving out to the left hand horizontally or turn your right hand round.







பின் வண்டி தன்னை முந்திச்செல்ல அனுமதிக்கும் பொழுது வலது கையை வெளியே நீட்டி உள்ளங்கை முன்புறம் படுக்கிடையாக இருக்க கையை முன்னும் பின்னும் அரைவட்ட வடிவமாக அசைத்தல் வேண்டும.

When slowing down extend your hand and move it up and down.

தன் வாகனத்தின் வேகத்தை குறைப்பதற்கு முன்னால் வலது கையை வெளியே நீட்டி உள்ளங்கையை கீழ்ப்புறம் இருக்க கையை மேலும் கீழும் பல முறை அசைத்தல் வேண்டும்.

When you are permitting the behind vehicle to overtake show your palm horizontally and it should be in the shape of half circle outside the door.






வாகனத்தை நிறுத்தும் பொழுது வலது கையை வெளியே நீட்டி உள்ளங்கையை முன்புறம் இருக்குமாறு செங்குத்தாக உயர்த்திக் காட்டுதல் வேண்டும்.

When stopping, raise your right hand upright.

**சாலையில் நடந்து செல்பவர்கள் சைக்கிள் ஓட்டிகள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் சாலையில் செல்லும்போது, முன் வாகன ஓட்டுநர் காண்பிக்கும் இந்த சைகையை புரிந்து கொள்வது அவசியம்.**

38. முன்னே செல்லும் வாகனங்கள் எதிரே வரும் வாகனத்திற்காக இடது புறம் ஒதுங்கலாம். அதை தனக்கு வழி விட்டதாக எண்ணி, பின்னே செல்லும் வாகனங்கள் உடனடியாக முந்த முயற்ச்சிக்காமல் நிதானித்து முந்த வேண்டும்.

39. பின்னால் வரும் வாகனத்திற்கு, இடது புறம் ஒதுங்கி வழிவிடும் வாகனம் தனது வாகனத்தை முந்தியவுடன் உடனடியாக வலது புறம் வாகனத்தை செலுத்தாமல், முந்திய வாகனத்தை தொடர்ந்து வேறு வாகனங்கள் வருகிறதா என்பதை கவனித்து செல்ல வேண்டும்.

40. முன்னால் செல்லும் வாகனத்தை முந்த நினைப்பவர்கள் முதலாவது எதிரே வேறு வாகனங்கள் வருகிறதா என்பதையும், எதிரே சாலையில் வளைவுகள் இருக்கிறதா, என்பதையும் கவனித்து, பின்பு ஒலி கொடுத்து வழி கேட்க வேண்டும்.

41. ஓட்டுநர்கள் வாகனத்தை இயக்குமுன் தன்னிடம் எவ்வளவு பெரிய பொறுப்பு கொடுக்கட்டிருக்கிறது என்பதை உணர வேண்டும். முதலாவது தன்னுடைய உயிர், தன்னை நம்பிபயணம் செய்யும் பயணிகளின் உயிர், தன்னை ஈன்ற பெற்றோரின் நிலை, தான் ஈன்ற அன்புக்குழந்தை, ஆவலோடு தன்னை எதிர்பார்த்து நிற்கும் மனைவி,சாலையில் நடமாடும் உயிரினங்கள் அனைவருக்கும் பாதுகாப்பாகவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

42.பின் வரும் வாகனத்திற்கு சைடு கொடுப்பதற்கு வலது பக்க இன்டிகேட்டரை போடக் கூடாது.

43. வாகனத்தில் பெட்ரோல், மண்ணெண்ணை, கேஸ் சிலிண்டர் போன்றவற்றை (அனுமதி உள்ள வாகனங்களில்) எடுத்துச் செல்லும் போது புகை பிடிக்க கூடாது.

44. நேராக செல்வதற்கு இன்டிகேட்டர் கிடையாது,தவறாக **Hazard Light**ஐ போட கூடாது.

45. **Warning Signal** உள்ள இடங்களில் கட்டாயம் மெதுவாக செல்ல வேண்டும்.

46. நகர எல்லைகளுக்குள் செல்லும் போது கட்டாயம் மெதுவாக செல்ல வேண்டும்.

## குறிப்பு : முதலுதவி அளிப்பவர்


1. காவல் துறைக்குத் தெரிவிக்க வேண்டும்.
2. ஆம்புலன்சுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
3. விரைவாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும்.
4. பாதிப்புக்குள்ளானவர் முகவரிக்கு தெரிவிக்க வேண்டும்.
5. முதலுதவி அளித்தவர் முகவரியைத் தெரிவிக்க வேண்டும்.


## எச்சரிக்கை வாசகங்கள்

1. அனுமதிக்கப்பட்ட வேக அளவை மீற வேண்டாம்.
2. அளவுக்கு அதிகமாக ஒலி எழுப்ப வேண்டாம்.
3. திடீரென பிரேக் போட வேண்டாம்.
4. திடீரென தடம் மாற வேண்டாம்.
5. வளைவில் முந்த வேண்டாம்.
6. பாலங்களில் முந்த வேண்டாம்.
7. வாகனம் ஓட்டும் போது சாலையைப் பயன்படுத்துவோர் மீது கோபத்தை காட்ட வேண்டாம்.
8. இடது பக்கமாக வாகனத்தை முந்த வேண்டாம்.
9. மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்ட வேண்டாம்.
10. விபத்து நடந்த பின் ஒருவருக்கொருவர் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ள வேண்டாம்.
11. சாலை விதிகளை மதிப்போம், உயிர் சேதத்தை தவிர்ப்போம்.
12. வேகத்தை விட, பாதுகாப்பே முக்கியம்.
13. போக்குவரத்து சிக்னலை, மற்றும் காவலர்களை மதித்து நடக்கவும்.
14. மழை நேரங்களில் கண்டிப்பாக வேகத்தை குறைக்க வேண்டும்.
15. வாகனத்தில் உள்ள உயிர்களையும் மற்றும் பொருள்களையும் சேதமின்றி கொண்டு செல்வது ஓட்டுனரின் பொறுப்பே ஆகும்.

நாம் வாகனம் ஓட்டுகின்றதை காட்டிலும் எப்படி ஓட்டுகின்றோம் என்பது மிக மிக முக்கியம். அதாவது நமக்கும் – மற்றவர்களுக்கும் நமது வாகனத்திற்கும், மற்றவர்களுடைய வாகனத்திற்கும், நமது வாகனத்திலுள்ள உயிர்களுக்கும், மற்றவர்களுடைய வாகனத்தில் உள்ள உயிர்களுக்கும், இடையூறும், சேதமும், இல்லாமலும் பொருட்களுக்கும், தேசத்திற்கும், இடையூறும், சேதமும் இல்லாமல் வாகனம் ஓட்டுவது தான் முக்கியம். இவ்வாறு ஓட்டுகிறவரே சிறந்த ஓட்டுனர் ஆவார்.

## Gear System




(Vth கியர் உள்ள வாகனமாக இருந்தால்)

## Speed Level வேகத்தின் அளவு

| | | |
|---|---|---|
| 0 to 10 KM | - | Ist Gear |
| 10 to 20 KM | - | IIst Gear |
| 20 to 30 KM | - | IIIrd Gear |
| 30 to 40 KM | - | IVth Gear |
| 40 to 120 KM | - | Vth Gear |

## Gear Changing Systems கியர் மாற்றும் முறை

(1வது) கிளச் மிதித்து.

(2 வது) ஆக்ஸிலேட்டரை விட்டு காலை எடுத்து விட்டு.

(3வது) கியரை மாற்றி விட்டு.

(4வது) கிளச்சை மெதுவாக விட்டு விட்டு.

(5வது) ஆக்ஸிலேட்டரை கொஞ்சம் கொஞ்சமாக அழுத்த வேண்டும்.

1. ஒரு வளைவில் சுமார் 250 அடி துாரத்திற்கு முன்னால் இன்டிகேட்டர் போட்டு சுமார் 100 அடி துாரம் இருக்கும்போதே சிறிதாக பிரேக்கை மிதித்து வேகத்தை குறைத்து 50அடி துாரம் இருக்கும் போது 2வது கியர் மாற்ற வேண்டும்.

2. சாதாரணமாக காரை நிறுத்தும் நேரத்தில் கிளச்சையும் பிரேக்கையும் மிதிக்க வேண்டும்.

3. திடீரென காரை நிறுத்த நேரிட்டால் முதலில் பிரேக்கை மிதித்து, 2வது கிளச்சை மிதிக்க வேண்டும்.

## வாகனத்தை இயக்கும் முன் கவனிக்க வேண்டியவைகள்


1. எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளனவா !
2. ரேடியேட்டரில் போதுமான அளவு தண்ணீர் உள்ளனவா !
3. டயரில் சரியான அளவு காற்று நிரப்பப்பட்டுள்ளனவா !
4. இஞ்சின் ஆயில் சரிபார்க்கப்பட்டுள்ளனவா (அல்லது) போதிய அளவு உள்ளனவா !
5. பேட்டரி இயக்கம் நல்ல நிலையில் உள்ளனவா !
6. டைனமோ வேலை செய்கின்றனவா !
7. விளக்குகள் யாவும் நன்றாக எரிகின்றனவா !
8. வைப்பர் பிளேடு நன்றாக வேலை செய்கின்றனவா !
9. இஞ்சின் இயக்கங்கள் யாவும் சரியாக இயங்குகின்றனவா !

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஆக்சிலேரேட்டர் | - | **Accelerator** |
| (ஆ) | பிரேக் | - | **Brake** |
| (இ) | கிளட்சு | - | **Clutch** |
| (ஈ) | கியர் | - | **Gear** |
| (உ) | மழைநீர் துடைப்பான் | - | **Wiper** |
| (ஊ) | ஒலி எழுப்பி | - | **Horn** |

சரியாக உள்ளனவா

## வாகனத்தில் இருக்கவேண்டிய ஆவணங்கள்

1. வாகனம் ஓட்டிச் செல்பவரது ஓட்டுநர் உரிமம் - **Driving licence**
2. வாகனத்தின் பதிவுச் சான்று - **Registration Certificate**
3. வாகன வரி செலுத்திய ரசீது - **Tax Receipt**
4. வாகனத்தின் காப்புச் சான்று - **Insurance Certificate**
5. வாகனத்தின் மாசுகட்டுப்பாடு சான்றிதழ் - **Pollution Certificate**


மற்றவர்களை போகவிட்டு அதன்பின் போகவேண்டிய இடங்கள்
இரு சக்கர வாகனம் வழி
ஹாரன்
இருசக்கர வாகனம் ஓட்டும் முறைகள்
வளைவில் திருப்பும் முறைகள்
வாகனத்தை சைடு வாங்கும் முறைகள்

2. ஓட்டுனர் தவிர காரில் பயணம் செய்பவர்கள் இடது பக்க கதவு வழியாக ஏறுவது மற்றும் இறங்குவது நல்லது.

3. வாகனத்தை நிறுத்தும் போது இடது பக்கம் ஓரமாக நிறுத்த வேண்டும் நடுரோட்டிலோ அல்லது வலது பக்கமோ நிறுத்தக்ககூடாது.

4. இடது பக்கம் அல்லது வலது பக்கம் திரும்பும்போது கட்டாயம் இண்டிகேட்டர் **Light** போட வேண்டும். மற்றும் கை **Signal** லும் காட்ட வேண்டும்.

5. பின் பகுதியில் மற்றும் சைடில் ஏதேனும் வாகனம் வருகிறதா என்று அடிக்கடி **Side Mirror** மற்றும் **Center Mirror** மூலமாக பார்க்க வேண்டும்.

6. வாகனத்திற்கு சைடு கொடுக்கும் போது, நாம் வேகத்தை சிறிது குறைத்தும், நமது வாகனம் வலது பக்கம் சென்று விடாமலும் செயல்பட்டு சைடு கொடுக்க வேண்டும்.

7. இரவில் பயணம் செய்யும் போது **Head Light**ஐ **Dim Beam**ல் வைத்து செல்லவேண்டும்.

8. இரவில் பயணம் செய்யும் போது வளைவு மற்றும் சாலை சந்திப்பிலும் **Head Light**ஐ **Dim Beam**மும் **High Beam**மும் செய்து எதிரில் வாகனம் வருகிறதா என்று பார்த்து செல்ல வேண்டும்.

9. வாகனத்தில் முன்னும் பின்னும் **Reflected Sticker** ஒட்டி வைப்பது நல்லது.

10. இரவில் வாகனத்தை நிறுத்தும் போது கட்டாயம் **Parking LIght** போட்டுத்தான் நிறுத்த வேண்டும்.

11. **Parking Light** மற்றும் **Danger Light** எரிகின்றதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்.

12. வாகனத்தை போட்டி போட்டு ஓட்டக்கூடாது, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஓட்ட வேண்டும்.

13. சைடு வாங்கும்போது எதிரே வாகனங்கள் வராதபோதுதான் முந்தி செல்ல வேண்டும்.

14. நமக்கு முன் செல்லும் வாகனத்தின் **Signal Light**, மற்றும் அந்த வாகனத்தின் ஓட்டுனர் **Hand Signal** காட்டுகின்றார்களா என்று பார்த்துக்கொண்டே செல்ல வேண்டும்.

15. நமக்கும், நமக்கு முன் செல்லும் வாகனத்திற்கும், 10 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்.

இயேசு உங்களுக்கு ஞானம் தருவார்.

# INFORMATORY SIGN தகவல் சின்னங்கள்




வழிகாட்டி
ROAD JUNCTION APPROACH



தூரம் திசைகாட்டி
DESTINATION SIGN


HOOK


குறுகிய வளைவு
NARROW BEND



வெள்ள அளவு மாணி


பெட்ரோல் பங்க் வலது பக்கம்
PETROL PUMP RIGHT SIDE


ஓய்வகம்
RESTING PLACE



விமான நிலையம்
AIR PORT


தொலைபேசி 1. கிமீ
PUBLIC TELEPONE


முதலுதவி
FIRST AID POST



உணவு விடுதி 500 மீ
EATING PLACE


மருத்துவமனை இடது பக்கம்
HOSPITAL LEFT SIDE


பக்கச் சாலை இல்லை
NO THROUGH SIDE ROAD


முன்னால் சாலை இல்லை
NO THROUGH SIDE ROAD


விபத்து பகுதி
OFTEN TO ACCIDENT


கால்வாயில் அதிக நீர்



முன்று ஊர் பெயர் தூரம் தெரிவிக்கிறது
BOARD SHOWS THREE PLACES & DISTANCE


இருபுறமும் நிறுத்தலாம்
PARKING BOTH SIDE


வலது புறம் நிறுத்தவும்
PARKING RIGHT SIDE ONLY


இரண்டு சக்கர வண்டி நிறுத்தலாம்
TWO WHEELERS PARKING


ஆட்டோ நிறுத்துமிடம்
AUTO STAND


டாக்ஸி நிறுத்துமிடம்
TAXI STAND


வேகத்தை குறைக்கவும்
REDUCED SPEED


"U" திருப்பம் போகலாம்.
"U" TURN

# விளக்கு சின்னங்கள் வாகனங்களுக்கு

# LIGHT SIGNALS FOR VEHICLES



சிவப்பு எரிந்தால் நிறுத்தக் கோட்டிற்கு முன்னால் நிறுத்த வேண்டும்.
RED - STOP



மஞ்சள் எரிந்தால் புறப்பட தயாராக இருத்தல் வேண்டும்.
AMBER - READY



பச்சை எரிந்தால் கடந்து செல்லலாம்.
GREEN - GO

---



சிவப்பு விளக்கு விட்டு விட்டு எரிந்தால் நன்கு கவனித்து எச்சரிக்கையுடன் செல்லலாம்.
Flickering Red Watch Carefully and Proceed With Caution



மஞ்சள் விளக்கு விட்டு விட்டு எரிந்தால் நன்கு கவனித்து எச்சரிக்கையுடன் செல்லலாம்..
Flickering Amber Watch Carefully and Proceed With Caution

---



சிவப்பு நிற்கவும்
Red - Stop



பச்சை கடந்து செல்லலாம்.
Green - Go

# வாகனத்தை இயக்கும் முன் கவனிக்க வேண்டியவைகள்

1. எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளனவா !

2. ரேடியேட்டரில் போதுமான அளவு தண்ணீர் உள்ளனவா !

3. டயரில் சரியான அளவு காற்று நிரப்பப்பட்டுள்ளனவா !

4. இஞ்சின் ஆயில் சரிபார்க்கப்பட்டுள்ளனவா (அல்லது) போதிய அளவு உள்ளனவா !

5. பேட்டரி இயக்கம் நல்ல நிலையில் உள்ளனவா !

6. டைனமோ வேலை செய்கின்றனவா !

7. விளக்குகள் யாவும் நன்றாக எரிகின்றனவா !

8. வைப்பர் பிளேடு நன்றாக வேலை செய்கின்றனவா !

9. இஞ்சின் இயக்கங்கள் யாவும் சரியாக இயங்குகின்றனவா !

# A) வாகனத்தை நிறுத்தக்கூடாத இடங்கள்


1) No Parking Areaவில், பாலங்களில், வளைவுகளில், சாலைகள் சந்திப்புகளில், ரயில்வே கேட்டுகளில், பஸ்டாப்களில், சிக்னல்களில், குறிகிய பாதைகளில், சந்துகளில், ஒருவழிச்சாலைகளில், வேகத்தடைகளில், சாலையின் வலது புறங்களில், நடுரோட்டில், பின்பக்கத்தில் நம் வாகனத்தின் அருகில் வாகனம் வந்து கொண்டு இருக்கும் நேரங்களில், மற்றவர்களுக்கு ஆபத்து தரக்கூடிய ரீதியில் உள்ள இடங்களில், மேலே குறிப்பிட்டுள்ள எல்லா இடங்களிலும், வாகனத்தை நிறுத்தக்கூடாது.

# வாகனத்தை நிறுத்தக்கூடிய இடங்கள்


2) Parking Areaவில் சாலையின் ஓரத்தில், இடதுபுரமாகவும் வாகன சோதனை நடக்கும் சமயங்களில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வாகனத்தை நிறுத்தலாம்.

# வாகனங்கள் ஓட்டும் போது ஆபத்து நேரிடுவதற்கான காரணங்கள்


1. குடித்து விட்டு வாகனம் ஓட்டுவதினால்.
2. மனநலம், உடல் நலம்சரியில்லாமல் ஓட்டுவதினால்.
3. சாலை விதிகளை கடைப்பிடிக்காமல் ஓட்டுவதினால்.
4. வாகனத்தை நல்ல முறையில் பராமரிக்காததினால்.
5. தூக்கம் வரும் போது ஓய்வெடுக்காமல் ஓட்டுவதினால்.
6. அதிவேகமாய் வாகனம் ஓட்டுவதினால்.
7. நடுரோட்டில் வாகனம் நிறுத்துவதினால்.
8. இண்டிகேட்டர் (முன்கூட்டியே) போடாமல் திரும்புவதால்.
9. செல்போன் பேசிக்கொண்டு ஓட்டுவதினால்.
10. **Head Light**ஐ **Dim** செய்யாமல் **Bright**ல் வைத்து ஓட்டுவதினால்.
11. அதிக பளு ஏற்றி, கண்ட்ரோல் பண்ணமுடியாமல் ஓட்டுவதினால்.
12. வாகனம் வழியில் பழுதடைந்தால் ஓரத்தில் நிறுத்தாமலும் மற்றும் சேப்டிக்குறிய சிக்னலை உபயோகப்படுத்தாததினாலும்.
13. வாகனத்தை நிறுத்தும் போது இண்டிகேட்டர் போடாமல் நிறுத்துவதால். சைடு கொடுக்க வேண்டிய நேரத்தில் கொடுக்காமல் இருப்பதினால்.
14. **Side Mirror** மற்றும் **Center Mirror**ஐ சரிவரக் கவனித்து ஓட்டாததினால்.
15. வளைவில், ரோடு சந்திப்பில், குறுகிய சாலையில் நிறுத்துவதினால்.
16. வேகமாக வரும் வாகனங்களுக்கு சைடு கொடுக்க வேண்டிய நேரத்தில் கொடுக்காமல் இருப்பதினால்.
17. முன் செல்லும் வாகனத்திற்கு குறிப்பிட்ட இடைவெளி விடாமல் ஒட்டிக் கொண்டு செல்வதினால்.
18. சரியாக கற்றுக் கொள்ளாமல் வாகனம் ஓட்டுவதினால்.
19. குறுக்கு சாலையிலிருந்து மெயின் ரோட்டிற்கு வரும் போது, நின்று, இருபக்கமும் பார்த்து கடந்து செல்லாமல், வேகமாக வந்து வளைவதினால்.


TRAFFIC SIGNAL AREA
Praise the lord
Round about
வட்டச்சுற்று
Signal Area
R
Y
G
MARVELOUS CAR DRIVING SCHOOL
999 455 3438, 962 962 8008, 80 154 63906, 88 258 28 298


## CAR CHASSIS





## CAR ENGINE




## CAR CLUTCH




## CAR GEAR BOX



# மோட்டார் வாகனச் சட்டம் - 1989

பிரிவு

122. வாகனத்தை இடது பக்க ஓரமாக நிறுத்த வேண்டும். பிற வாகனங்களுக்கு அபாயம் ஏற்படும் வகையில் நிறுத்தக் கூடாது.

123. வாகன ஓட்டத்தின் போது படிக்கட்டில் பயணிகளை பயணம் செய்யவோ, உடமைகளை வைக்கவோ அனுமதிக்கக்கூடாது.

125. வாகனத்தை ஓட்டும்போது ஓட்டுநருக்கு இடையூறாக ஆட்களையோ,பொருட்களையோ அனுமதிக்கக்கூடாது.

126. வாகனத்தை நிலையாக நிறுத்தி வைக்கும் போது இன்ஜினை ஆப் செய்து வாகனம் திடீரென்று நகராமல் இருக்க கை பிரேக் உபயோகிக்க வேண்டும்.

128. மோட்டார் சைக்கிளில் ஓட்டுநர் தவிர ஒரு ஆளுக்கு மேல் பயணம் செய்யக் கூடாது.

129. மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும்.

130. வாகன ஓட்டுநர்கள், காவலர்கள் மற்றும் வாகன அதிகாரிகள் கேட்கும்போது உரிமம் மற்றும் ஆவணங்களை காண்பித்தல் வேண்டும்.

131. ஆளில்லாத ரயில்வே லெவல்கிராசிங்கை கடக்கும்போது வாகன ஓட்டுநர் 200 மீட்டர் தொலைவில் வண்டியை நிறுத்திவிட்டு லெவல் கிராசிங்கின் இருபக்கமும் ரயில் (அ) டிராலி வருகிறதா என பார்த்து, வரவில்லை என முடிவு செய்த பின்னரே லெவல் கிராசிங்கை கடந்து செல்ல வேண்டும்.

134. காயமடைந்தவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உடனே மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

20. பின்பகுதியிலிருந்து வரும் வாகனத்திற்கு சைடு கொடுக்கும் போது நம்முடைய வாகனத்தின் வேகத்தை குறைக்காததாலும், போட்டிபோட்டு ஓட்டுவதினாலும்.

21. வேகத்தடை உள்ள பகுதியில் வேகமாக செல்வதினாலும்.

22. **Wrong Side**ல் செல்வதினாலும்.

23. சாலை விதிகளை அறிந்து கொள்ளாமலும், கடைபிடிக்காமலும் ஓட்டுவதினால்.

24. கண்பார்வை சரியில்லாமல் ஓட்டுவதினாலும்.

25. பின் வரும் வாகனத்திற்கு சைடு கொடுப்பதற்கு **Right Side** இண்டிகேட்டரை போடுவதினால்.

26. **Hand Signal** காட்டாமலும், **Indicator** போடாமலும் திரும்புவதால்.

27. **Speed Limit Area**வில் அதி வேகமாக செல்வதினாலும்.

28. வளைவுகளில் வேகமாக செல்வதினாலும்.

# வாகன வேகம்

சாலை விபத்திற்கு ஒரு முக்கிய காரணம் அதிக வேகம்.

## வாகனத்தின் வேகத்தைக் குறைக்க வேண்டிய இடங்கள்.

1. பிரதான சாலையில் நுழையும் போது.
2. சாலைச் சந்திப்பை நெருங்கும் போது.
3. பாதசாரிகள் கடக்கும் இடத்தை அனுகும் போது.
4. எதிர்வாகன முகப்பு விளக்குகளால் கண்கூசும் போது.
5. பள்ளிக்கூடம் அருகில் செல்லும் போது.
6. விலங்குகள் குறுக்கிடும் போது.
7. நிற்கும் வாகனத்தைக் கடந்து செல்லும் போது.
8. நகர் பகுதிக்குள் நுழையும் போது.
9. சாலை பழுது பார்க்கும் இடத்தை நெருங்கும் போது.
10. மக்கள் நெரிசல் உள்ள இடத்தை அணுகும் போது.

# MANDATORY SIGN உத்தரவு சின்னங்கள்



எந்த வண்டியும் போகக்கூடாது
ALL MOTOR VEHICLES PROHIBITED



குதிரை வண்டி செல்லத்தடை
TONGA PROHIBITED




கை வண்டி செல்லத்தடை
HAND CART PROHIBITED



வேக வரம்பு முடிவு
RESTRICTION ENDS




மிக மெதுவாக செல்லவும்
DEAD SLOW



கண்டிப்பாக இடது புறம் செல்லவும்
COMPULSORY TURN LEFT



வாகனங்களை நிறுத்த தடை
NO PARKING



நிறுத்தவும் நிறுத்தி வைக்கவும் கூடாது
NO STOPPING



கட்டாயம் நேராக (அ) இடதுபுறம் திரும்பவும்
COMPULSORY AHED OR TURN LEFT



கட்டாயம் நேராக (அ) வலது புறம் திரும்பவும்
COMPULSORY AHED OR TURN RIGHT



கட்டாயம் இடது புறம் செல்லவும்
COMPULSORY KEEP LEFT



கண்டிப்பாக ஒலி கொடுக்கவும்
COMPULSORY SOUND HORN



கண்டிப்பாக நேராக செல்லவும்
COMPULSORY AHEAD ONLY



கண்டிப்பாக வலதுபுறம் திரும்பவும்
COMPULSORY TURN RIGHT



கண்டிப்பாக சைக்கிள் பாதையில் செல்லவும்
COMPULSORY CYCLE TRACK

16. ஒவ்வொரு கியரை மாற்றும் போதும் கிளச்சை அழுத்திக் கொண்டு கியரை மாற்ற வேண்டும்.

17. கிளச்சை அழுத்தும் போது ஆக்ஸிலேட்டர் பெடலை விடவேண்டும்.

18. ஒவ்வொரு முறையும் கிளச்சை விட்டபிறகு ஆக்ஸிலேட்டர் கொடுக்க வேண்டும்.

19. வேகத்தை குறைப்பதற்கு தேவைப்பட்ட அளவு பிரேக் பெடலை மட்டும் அழுத்த வேண்டும் கிளச் அழுத்த தேவையில்லை.

20. வாகனத்தை நிறுத்துகின்ற போது அல்லது 20km வேகத்திற்கு கீழ் வேகத்தை குறைக்கும் பட்சத்தில் கட்டாயம் கிளச்சையும் பிரேக்கையும் சேர்த்து அழுத்த வேண்டும்.

21. வாகனம் நின்றவுடன் **Hand Brake**ஐ போட்டு விட்டு. பிரேக்கை விட்டு காலை எடுக்கலாம். ஆனால் **Neutral** செய்யும் வரை கிளச்சில் இருந்து காலை எடுக்கக் கூடாது.

22. வாகனத்தை நகர்த்துமுன் ஒலி கொடுத்து **Signal** காட்டி புறப்பட வேண்டும். நிறுத்தும் பொழுதும் **Signal** மற்றும் கைசெய்கை காட்டி வாகனத்தை நிறுத்த வேண்டும்.

23. வாகனத்தில் முன் சக்கரங்களில் புதிய அல்லது தேய்மானமில்லாத நல்ல **Condition**ல் உள்ள டயர்களை பொறுத்த வேண்டும்.

24. ஓட்டுனர்கள், சாலைகளில் மனிதர்கள், குழந்தைகள், கால்நடைகள் ஓரமாக சென்றாலும், நின்றாலும், எந்த திசையில் செல்லப் போகிறார்கள் என்பதை முன்னதாகவே நிதானித்து செல்ல வேண்டும்.

25. ஒரு திறமையான ஓட்டுனர் தன் தொழிலில் ஒரு விபத்துக்கூட ஏற்படவிடாமல் நடந்து கொண்டால் அது அவருக்கு பெருமை.

26. மெதுவாக ஓட்டிச் செல்வதால் விபத்துக்களைத் தடுக்கலாம் என்று நினைப்பது தவறு. மெதுவான வேகத்திலும் விபத்துகள் ஏற்படுவதுண்டு, அதனால் எச்சரிக்கையாக இருப்பது தான் முக்கியம்.

27. எந்த நெருக்கடியான வளைவான இடத்திலும் எந்த நேரத்திலும் நினைத்த மாத்திரத்தில் வண்டியை விபத்து ஏதுமின்றித் திருப்பவோ, நிறுத்தவோ கூடிய கட்டுப்பாடான வேகமே சரியான வேகமாகும்.

# WARNING SIGN எச்சரிக்கை சின்னங்கள்



பக்கவீதி இடது
SIDE ROAD LEFT



பக்கவீதி வலது
SIDE ROAD RIGHT



முன்னால் பெரிய சாலை
MAJOR ROAD AHEAD



குறுக்க சாலைகள்
CROSS ROAD



சாலை முடிவு
T INTERSECTION



துண்டித்து இடது நேராகவும் போகும் பாதை
Y INERSECTIONS LEFT & STRAIGHT



அடுத்தடுத்து வலது புற இடம் புறசாலை
STAGGERED LEFT & RIGHT INTERSECTIONS



பாறைகள் உருளும் (கவனம்)
FALLING ROCKS



அடுத்தடுத்து இடது புற வலது புறசாலை
STAGGERED RIGHT & LEFT INTERSECTIONS



மிக மெதுவாக முன்னால் பெரிய சாலை
MAJOR ROAD AHEAD



பாதசாரிகள் குறுக்கீடு
PEDESTRAIN CROSSING



சாலை வலதுபுறம் வளைவு
RIGHT HAND CURVE



சாலை இடதுபுறம் வளைவு
LEFT HAND CURVE



கொண்டை ஊசி வளைவு வலது
HAIR PIN BEND RIGHT



கொண்டை ஊசி வளைவு இடது
HAIR PIN BEND LEFT



வளைந்து செல்லும் பாதை வலது
REVERSE BEND RIGHT



வளைந்து செல்லும் பாதை இடது
REVERSE BEND LEFT



முன்னால் அகன்ற சாலை
ROAD WEDENS AHEAD



முன்னால் குறுகிய சாலை
NARROW ROAD AHEAD



வட்ட சுற்று
ROUND OUT

28. காரை நகர்த்தும் முன்பே சரியாக இயங்குகின்றனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

29. முன் செல்லும் வாகனத்தை முந்த வேண்டுமானால் முதலில் வலப்புறத்தில் வாகனங்கள் வருகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். மேலும் வலது புறத்தில் சாலைகளில் வளைவுகள் இருக்கிறதா என்பதையும் சாலையில் இடையூறுகள், அதிகமான மக்கள் நடமாட்டங்கள் இருக்கிறதா என்பதையும் கவனித்து, பிறகு ஒலி கொடுத்து, வழி கிடைத்தபின் முந்திச் செல்ல வேண்டும்.

30. தவறாக சிக்னல் தெரிவித்தால் போக்குவரத்தில் இடையூறு ஏற்படுவதுடன் விபத்துக்களையும் சந்திக்க நேரிடும்.

31. வளைவுகளில் ஒலி கொடுக்கமால் செல்வதும், இடை விடாமல் ஒலி கொடுப்பதும் ஆபத்தை தரும்.

32. ஓட்டுநருக்கு அருகில் உள்ள பயணிகளிடம் அதிக உரையாடலோ அல்லது போட்டி போட்டுக்கொண்டு வாகனத்தை முந்த நினைப்பதோ அல்லது வழி விட மறுப்பதோ கூடாது.

33. சாலைகளில் எதிர்பாராமல் பழுதுபட்ட அல்லது விபத்துக்குள்ளான ஊர்திகளுக்கோ பயணிகளுக்கோ உதவி தேவைப்படும் போது உதவி செய்ய வேண்டும்.

34. சாலைகளில் முன்னால் போய்க் கொண்டிருக்கும் வாகனங்கள், பின்னால் வரும் வாகனத்திற்குப் பொறுப்பாகவும், பிழை இல்லாமலும் சைகை காட்டி உதவ வேண்டியது ஓட்டுநரின் கடமை என்பதை உணர வேண்டும்.

35. ஓட்டுநர்கள் காவலரின் சைகைகளையும், ஆலோசனைகளையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

36. வாகனத்தில் எதிர்பாராமல் தீ பிடித்துக் கொள்ளுதல், புகைதல் போன்ற நேரங்களில் பேட்டரி இணைப்பபை துண்டிக்க வேண்டும். அல்லது மணல், சாக்கு, கடினமான துணி போன்றவைகளால் அடித்து அணைக்க வேண்டும்.

37. வாகனத்தை ஓட்டும் பொழுதும், நிறுத்தும் பொழுதும் இடது புறத்தை பின்பற்ற வேண்டும். முன்னே செல்லும் வாகனங்களை கண்டிப்பாக நெருங்கிச் செல்லக்கூடாது.

4. (Hills Area) மலைப் பகுதியில் நாம் மலையிலிருந்து இறங்கும் நேரங்களில் எதிர் வாகனம் சிரமப்பட்டு மலையில் ஏறிக்கொண்டு இருப்பதால் அந்தவாகனம் கடந்த செல்ல, நாம் ஓரமாக நின்று நன்றாக வழி விட வேண்டும்.

5. ஆம்புலன்ஸ், தீயணைப்பு, அவசர போலீஸ், VIP மற்றும் உயரதிகாரிகளின் வாகனங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் கடந்து சென்ற பிறகே, நாம் செல்ல வேண்டும்.

6. எதிரில் வருகிற வாகனம் குறுகலான இடங்களில் அல்லது சந்து போன்ற இடங்களில், வந்து கொண்டிருக்கும் போதும் அல்லது வளைவில் வளைந்து கொண்டு இருக்கும் போதும் நாம் நின்று அந்த வாகனத்திற்கு வழி விட்டு அதன் பிறகுதான் நாம் செல்ல வேண்டும்.

---

**F)** நாம் சாதாரணமாக முன் பக்கமாக வாகனத்தை ஓட்டி செல்லும் போது நம்முடைய பார்வை ஐந்து விதத்தில் இருக்க வேண்டும். அப்போதுதான் ஆபத்தையும் பிரச்சினைகளையும் தவிர்க்கலாம்.

**1. தூரப்பார்வை - Long Site**
**2. வாகனத்தின் அருகில் - Near Site**
**3. நடுநிலைப்பார்வை - Middle Site**
**4. பின்பக்க பார்வை - Rear View Site**
**(கண்ணாடிகள் மூலமாக )**
**5. வது பார்வை**

மீட்டர்கள், கேஜ்கள் சரியாக இயங்குகின்றதா என்று அடிக்கடி பார்க்க வேண்டும். (Dash Board)ல் உள்ள Meters, Gages, Lights.


நாம் முன் பக்கமாக வாகனம் ஓட்டும் போது நம்முடைய பர்வையின் அளவு 75% சதவீதம் முன் பக்கமும், 25% சதவீதம் பின் பக்கமும் இருக்க வேண்டும்.

நாம் Reversல் செல்லும்போது நம்முடைய பார்வையின் அளவு 75% சதவீதம் பின் பக்கமும், 25% சதவீதம் முன் பக்கமும் இருக்க வேண்டும்.


## G) ஆபத்துகளை தவிர்க்கவும், திறமையுடன் வாகனத்தை ஓட்டவும்

1. ஓட்டுனர் ஏறும்போதும், இறங்கும்போதும், வாகனத்திற்குமுன்பும், பின்பும் வேறு வாகனங்கள் ஏதாவது வருகிறதா என்று பார்த்து வாகனங்கள் வராத போதுதான் கதவை திறந்து ஏறவோ, இறங்கவோ வேண்டும்.


# POLICE SIGN காவலர் சைகைகள்



இவருக்கு பின்வரும் வாகனங்களை நிறுத்த
To stop a vehicle approching from behind.



இவருக்கு முன் பின்வரும் வாகனங்களை நிறுத்த
To stop a vehicle coming from front and behind



இவருக்கு இடதுபக்கமாக வரும் வாகனங்களை நிறுத்தி வலதுபக்கம் போக சொல்ல
To stop a traffic approaching from left and wanting to turn right.



இவருக்கு வலதுபக்கம் வரும் வாகனங்களை நிறுத்தி முன்னால் உள்ள வாகனங்களை வலதுபக்கம் திரும்பும்படி செய்தல்.
To stop a traffic approaching from right to allow traffic from the left to turn right.



இவருக்கு முன்னால் வரும் வாகனங்களை நிறுத்த
Beckoning on vehicles from front

சிவப்பு நிற்கவும் Red - Stop

பச்சை செல்லலாம். Green - Go

## B) வாகனத்தில் வேகமாக செல்லக்கூடாத இடங்கள்

1. வேகத்தடைகளில், வளைவுகளில், சிக்கனல்களில், சாலைகள் சந்திப்புகளில், இரயில்வே கேட்டுகளில் மற்ற வாகனங்களுக்கு சைடு கொடுக்கும் போதும், நகரப் பகுதிகளில் செல்லும் போதும், பள்ளி கூடங்கள் உள்ள பகுதிகளிலும் நமக்கு முன் பாதை, குறுகின நிலைகளில் இருந்தாலும், ரோடு பழுது அடைந்த இடங்களிலும், எதிரில் வாகனங்கள் வரும் போதும் வேகமாக செல்லக்கூடாது, சாலை பணிகள் நடைபெறும் இடங்களிலும் வாகன சோதனையின் போதும் வேகமாக செல்லக்கூடாது.

## வாகனத்தில் வேகமாக செல்லக்கூடிய இடங்கள்

2. வெளிப்புறச் சாலைகளில், நேரான சாலைகளில், **Highway** மற்றும் **Ring Road**களில் விதிக்கப்பட்டுள்ள**(Speed)**வேகத்தில் செல்லலாம்.

## C) வாகனத்தை சைடு வாங்க கூடாத இடங்கள்

1. பாலங்களில், வளைவுகளில், சிக்னல்களில், சாலைகள் சந்திப்புகளில், வேகத்தடைகளில், ஒரு வழிப்பாதைகளில், ரயில்வே கேட்டுகளில், சாலையின் நடுப்பகுதியில் போடப்பட்டுள்ள கோடு தொடர்ந்து விடாமல் போடப்பட்டுள்ள இடங்களில், முந்தக்கூடாது என்ற உத்தரவு சின்னங்கள் உள்ள இடங்களில், நமக்கு எதிரில் வாகனம் வரும் போதும், நம் வாகனத்தை நமக்க பின் வரும் வாகனம் முந்த முயற்சி செய்யும் போதும், சைடு வாங்கக் கூடாது. எக்காரணத்தை கொண்டும் இடது பக்கமாக சைடு வாங்கக் கூடாது.

## சைடு வாங்க கூடிய இடங்கள்

2. நம் வாகனத்தை நமக்கு பின் வரும் வாகனம், முந்த முயற்சிக்காமல் இருக்கும் போதும், சாலையின் நடுப்பகுதியில் போடப்பட்டுள்ள கோடு விட்டு விட்டு போடப்பட்டுள்ள இடங்களில், நம் வாகனத்திற்கு எதிரில் வாகனம் வராமல் இருக்கும் போதும், வளைவு இல்லாத இடங்களில், சைடு வாங்கி கொள்ளலாம். சைடு வாங்கும் போது வலது பக்கமாகதான் சைடு வாங்க வேண்டும்.

## D) Horn அடிக்க கூடாத இடங்கள்

1. கோர்ட், வழிபாடு ஸ்தலங்கள், மருத்துவமனை, பள்ளி கூடங்கள், அலுவலகங்கள், சிக்னலில் வாகனம் நிற்கும் போதும், இரயில்வே கேட்டில் வாகனம் நிற்கும் போதும், **Horn**ஐ அடிக்க அனுமதி இல்லை என்ற **Signal** உள்ள இடங்களிலும், இரவு நேரங்களில் வீடுகள் நிறைந்துள்ள பகுதிகளிலும், காரணமே இல்லாமல் மற்றவர்களுக்கு இடையூறு கொடுக்கும் ரீதியிலும், **Horn**ஐஅடிக்கக் கூடாது.

## Hornஐ அடிக்க வேண்டிய இடங்கள்

2. வாகனத்தை சைடு வாங்கும்போதும் மனிதர்களையோ அல்லது உயிரினங்களையோ கடக்கும் போதும், வளைவுகளிலும், சாலைகள் சந்திப்புகள், **Revers**ல் வரும்போதும், **Horn**ஐ அடிக்க உத்தரவு **Signal** உள்ள இடங்களிலும், நம் எதிரில் வரும் வாகனம் நாம் செல்ல பாதையை தரவில்லை என்றாலும், நாம் **Horn**ஐ அடிக்க வேண்டும்.

## E/1) எதிரில் வரும் வாகனங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, நாம் நின்று, எதிர் வாகனம் சென்ற பிறகு செல்ல வேண்டிய இடங்கள்.

1. நாம் குறுக்கு சாலையில் இருந்து மெயின் சாலைக்கு செல்லும் போது மெயின் சாலையில் வரும் வாகனம் கடந்து செல்லும் வரை நின்று அதன் பின் செல்ல வேண்டும்.

2. ரவுண்டானத்தில் எதிர் வாகனம் முதலில் வந்து கடந்து கொண்டு இருக்கும்போது நாம் ரவுண்டானா நுழைவில் நின்று முதலில் வந்த வாகனம் கடந்த பிறகு தான் ரவுண்டானத்திற்குள் நுழைந்து செல்ல வேண்டும்.

3. இடது பக்கம் நமது சைடில் வாகனம் ஏதேனும் நின்றால் நமக்கு எதிர் வரும் வாகனம் கடந்த செல்லும் வரை நின்று, பிறகுதான் செல்ல வேண்டும்

# பாதி கிளச் மிதித்து இருக்க வேண்டிய நேரங்கள்

1. குறுகியவளைவில் செல்லும் போது,
2. ரிவர்ஸ் கியரில் செல்லும் போது,
3. வேகத்தடையில்செல்லும்போது,
4. 1வது கியரில் நகர்த்தும் போதும்,
5. பெரிய பள்ளம் மற்றும் மேடுகளில் மெதுவாக செல்லும் போதும்.

# இறக்கமான சாலையில் செல்லும் முறை

1. ஆக்சிலேட்டரை விட்டுவிட வேண்டும்.
2. Brakeஐ சிறிதாக அழுத்தியபடி செல்ல வேண்டும்.
3. பாதிகிளச் மிதித்து இருக்க வேண்டும்.

# செங்குத்தான சாலையில் செலலும் முறை

1. ஆக்சிலேட்டரை சாதாரணமாக அழுத்துவதை விட கொஞ்சம் அதிகமாக அழுத்த வேண்டும்.

2. மேட்டில் ஏறி முடியும் வரை ஆக்சிலேட்டரை விட்டுவிடக்கூடாது.

3. ஏறிய பிறகு ஆக்சிலேட்டரை விட்டுவிட வேண்டும்.

4. மேட்டில் ஏறிக்கொண்டு இருக்கும் போது Brakeஐ மிதிக்கக் கூடாது.

5. மேட்டில் ஏறும் போது கிளச்சையும் மிதித்து இருக்க கூடாது.

நாம் வாகனம் ஓட்டும் போது நமக்கு முன்னே அல்லது நமக்கு பின்னே வருகின்ற வாகனங்களுக்கு விபத்து அல்லது இடையூறு தரும் விதத்தில் வாகனம் ஓட்ட கூடாது. நம்மால் பிறருக்கு எந்த விதத்திலும் விபத்து வரக்கூடாது என்ற எண்ணம் உடையவர்களாக வாகனத்தை ஓட்ட வேண்டும்.

# கன ரக, இலகு ரக, இரு சக்கர, ஆட்டோ, வாகன ஓட்டுனர்களுக்கு விபத்து இல்லாமல் பாதுகாப்புடன் வாகனம் ஓட்டுவதற்கான ஆசிரியரின் வேண்டுகோள்,

## உறுதி எடுப்போம்

1. சாலை விதிகளை அறிந்து கொள்வோம்.
2. சாலை விதிகளை மதிப்போம்.
3. சாலை விதிகளை கடைபிடிப்போம்.

## பாதுகாக்கும் கடமைகள்

நம்மை, நம் குடும்பத்தாரை, நம் வாகனத்தை, மற்றவர்களை, மற்றவர்களின் குடும்பத்தாரை, மற்றவர்களின் வாகனங்களை, நம் தேசத்தை, நம் தேசத்து ஜனங்களையும், பொருட்களையும் காப்போம்.

## ஓட்டாதீர்கள்

உரிமம் இல்லாமல், சாலை விதிகளை அறிந்து கொள்ளாமல், மனநலம், உடல் நலம் சரி இல்லாமல், Head லைட்டை பிரைட்டில் வைத்து, பழுதுடன் உள்ள வாகனத்தை, ராங் சைடில், அதிக பளுவை ஏற்றிக் கொண்டு, வளைவில் சைடு வாங்கி, மது அருந்தி விட்டு, மற்றவர்களுக்கு இடையூறு கொடுக்கும் விதத்தில், மற்ற வாகனங்களுக்கு இடையூறு கொடுக்கும் விதத்தில், இண்டிகேட்டர் போடாமல் அல்லது கை சிக்னல் காட்டாமல், சரிவர கற்றுக் கொள்ளாமல், காவலர்கள் சைகையை மதிக்காமல், சாலையில் உள்ள சின்னங்களை கவனிக்காமல், Hornஐ அடிக்க வேண்டிய இடத்தில் அடிக்காமல்,

## வேகமாக ஓட்டாதீர்கள்

டவுன் பகுதியில், மழை பெய்கின்ற நேரங்களில், வேகத் தடையில், சிக்னல் ஏரியாவில், மக்கள் நெரிசல் உள்ள பகுதியில், சாலை சந்திப்புகளில், சைடு கொடுக்கும் போது, பள்ளிகூட பகுதிகளில், சந்து போன்ற இடங்களில், பாலங்களில், சாலைப்பணி நடைபெறுகின்ற இடங்களில், பாதசாரிகள் சாலையை கடக்கும் போது, ரவுண்டானம் பகுதிகளில், பழுது அடைந்துள்ள சாலைகளில், எதிரில் வாகனம் வரும் போதும், வளைவுகளிலும், நிறுத்தி வைக்காதீர்கள் சாலையின் நடு பகுதிகளில், No பார்க்கிங் பகுதிகளில், செங்குத்தான இடங்களில், சாலையின் வலது பக்கத்தில், சாலை சந்திப்புகளில், குறுகிய சாலை பகுதிகளில், சந்து போன்ற இடங்களில், சிக்னல் ஏரியாவில், பச்சை விளக்கு எரியும் நேரங்களில், ( பின்வரும், முன்வரும், வாகனத்திற்கு இடையூறு கொடுக்கும் ரீதியில்) வளைவுகளிலும்

# MANDATORY SIGN உத்தரவு சின்னங்கள்




நிறுத்தவும்
STOP




வழி கொடுக்கவும்
GIVE WAY



போகத்தடை
NO ENTRY





ஒரு வழி போகத்தடை
ONE WAY SIGNS




நீளவரம்பு
LENGTH LIMIT




ஆக்ஸில் அளவு
(4 டன்)
AXLE LOAD LIMIT



லாரிகள்
செல்லத்தடை
TRUCK
PROHIBITED



சைக்கிள்
செல்லத்தடை
CYCLE
PROHIBITED



பாதசாரிகள்
செல்லதடை
PEDESTRAIN
PROHIBITED



வலதுபுறம்
செல்லத்தடை
RIGHT TURN
PROHIBITED



இடதுபுறம்
செல்லத்தடை
LEFT TURN
PROHIBITED



ஒலி எழுப்பத்தடை
HORN PROHIBITED




வேக வரம்பு
(50 கி.மீ)
SPEED LIMIT



முந்திச்செல்லத்தடை
OVER TAKING
PROHIBITED



"U" திருப்பம்
திரும்பத்தடை
"U" TURN
PROHIBITED



இருவழியில் தடை
VEHICLES
PROHIBITED IN
BOTH DIRECTIONS




எடை அளவு
(5 டன்)
LOAD LIMIT




உயர வரம்பு
(3.5மீ)
HIGHT LIMIT




அகல வரம்பு
(2 மீ)
WIDTH LIMIT

இயேசு உங்களை ஆசீர்வதிப்பார்.

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான் : நீதி : 28 : 20

காரைக்குடி மாநகருக்கு புதியதோர் வாய்ப்பு
அரசின் புதிய விதிமுறைகளின்படி உருவாக்கப்பட்ட மாவட்டத்தின் முதல் கார் பயிற்சிப் பள்ளி என்பது எங்களின் தனிச்சிறப்பு

சிறந்த மற்றும் திறமையான வாகன ஓட்டுனர்களை உருவாக்கிட உங்களுக்காக உதயமாகி உள்ளது.

# மார்வலஸ் கார் டிரைவிங் ஸ்கூல்

## தொழில் நுட்ப நிறுவனம்

எங்களிடம் நவீன காலத்திற்கேற்ற வாகனங்களை கொண்டு ஆண், பெண் இருபாலருக்கும் அனுபவமிக்க பயிற்சியாளரைக் கொண்டு கார் ஓட்டக் கற்றுத்தருகிறோம், கார் மற்றும் டுவீலர் லைசென்ஸ் பெற்றுத்தருகிறோம்.

**குறைந்த செலவில் நிறைந்த சேவையை அளிக்கும் உங்கள் மார்வலஸ் டிரைவிங் ஸ்கூலின் சிறப்பம்சங்கள்.**

★ ஒவ்வொரு மாணவர்களுக்கும் சாலை விதிகளைப்பற்றிய சிறந்த பயிற்சி வகுப்புகள் அளிக்கப்படுகிறது.

★ வாகனத்தின் ஒவ்வொரு பாகங்களைப் பற்றியும் முழுவதுமாக தெரிந்துகொள்ளுமளவிற்கு செய்முறைப் பயிற்சி வகுப்புகள் அனுபவமுள்ள பயிற்சியாளர்களைக் கொண்டு அளிக்கப்படுகிறது.

★ எங்களிடம் பயிற்சிபெறும் வாகன ஓட்டுநர்கள் வெளிநாட்டிலும் சென்று திறமையாக ஓட்டுமளவிற்கு பயிற்சி தரக்கூடிய வெளிநாட்டு அனுபவமுள்ள பயிற்சியாளரைக் கொண்டு பயிற்சியளிக்கப்படுகிறது.

★ பெண்களுக்கு தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ எங்களிடம் பயிற்சிபெறும் மாணவர்கள் 100% தேர்ச்சி பெற்ற ஓட்டுனர்களாக உருவாக்கப்படுவார்கள்.

பழைய மற்றும் புதிய கார்கள் வாங்க விற்க அணுகுங்கள்

JESUS CARS

IRUDAYAM AUTOMOBILES

18, K.V.S. நகர், T.N.H.B எதிரில், கழனிவாசல், காரைக்குடி.

## கார் ஓட்ட அமர்ந்தவுடன் செயல்படும் முறை

காரில் நாம் அமர்ந்த உடனே இஞ்சினை Start செய்வதற்கு முன்பாக, Gear Neutralலில் உள்ளதா என்று பார்க்க வேண்டும். அதன் பின்பு Keyஐ On செய்ய வேண்டும். அப்பொழுது Dash-Boardல் உள்ள Battery Charging Light மற்றும் Oil Pressure LIght எரிகிறதா என்று பார்க்க வேண்டும். இதன் பின்புதான் Engineஐ Start செய்ய வேண்டும். Engine Start ஆன உடனேயே கையை Keyல் இருந்து எடுத்துவிட வேண்டும். Keyஐ பிடித்து கொண்டே இருத்தல் கூடாது. Engine Start ஆன உடனே எரிந்துகொண்டிருந்த Battery Charging Light Off ஆகிவிட்டதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். அதன் பின்பு Hand Brakeஐ Releas செய்து விட வேண்டும்.

## வாகனத்தை இயக்க ஆரம்ப முறை

1. வாகனத்தை இயக்கும் முன் Seat Asst செய்து, அதன் பின் Side Mirror Asst செய்யவேண்டும்.

2. ஸ்டாட்ட்ர் சுவிட்சை ஆன் செய்ய வேண்டும் பிறகு செல்ப் போட வேண்டும்.

3. கிளச்சை அழுத்திக் கொண்டு **1st** கியரை போட வேண்டும்.

4. மெதுவாக கிளச்சை விட்டு நகரும் தருணத்தில் கொஞ்சம் (பேப்பர் அளவு) ஆக்சிலேட்டரை அழுத்த வேண்டும்.

## BRAKE SYSTEM

1. **Slow Brake** காரின் வேகத்தை மெதுவாக குறைக்க. பிரேக்பெடலை மெதுவாக மிதித்துவிட்டு. தேவையான **Slow** ஆனவுடன் காலை எடுத்துவிட வேண்டும்.

2. **Stop Brake** காரை நிறுத்த பிரேக் பெடலை கொஞ்சம் கொஞ்சமாக மிதித்து, மிதித்தபடியே இருக்க வேண்டும். காலை பிரேக் பெடலை விட்டு எடுத்தல் கூடாது.

3. **Sudden Brake** காரின் வேகத்தை உடனடியாக குறைக்க வேகமாக பிரேக் பெடலை மிதிக்க வேண்டும்.

4. பிரேக் பழுதாகிவிட்டால் **Hand Brake** போடவேண்டும்.

5. அதி வேகத்தில் இருக்கும் பொழுது **Geardown** செய்த பின்னர் தான் **Hand Brake** போடவேண்டும்.

## நிறுத்தி வைக்காதீர்கள்

சாலையின் நடு பகுதிகளில், No பார்க்கிங் பகுதிகளில், செங்குத்தான இடங்களில், சாலையின் வலது பக்கத்தில், சாலை சந்திப்புகளில், குறுகிய சாலை பகுதிகளில், சந்து போன்ற இடங்களில், சிக்னல் ஏரியாவில், பச்சை விளக்கு எரியும் நேரங்களில், (பின்வரும், முன்வரும் வாகனத்திற்கு இடையூறு கொடுக்கும் ரீதியில்) வளைவுகளிலும், சாலையின் நடு பகுதிகளில், No பார்க்கிங் பகுதிகளில், செங்குத்தான இடங்களில், சாலையின் வலது பக்கத்தில், சாலை சந்திப்புகளில், குறுகிய சாலை பகுதிகளில், சந்து போன்ற இடங்களில், சிக்னல் ஏரியாவில், பச்சை சிக்னல் விளக்கு எரியும் நேரங்களில், வளைவுகளிலும்,

## விபத்து இல்லாமல் பாதுகாப்புடன் செல்ல

பாதுகாப்புடன் நாம் வாகனம் ஓட்டுவோம், சரியாக வாகனத்தை கற்றுக் கொண்டு ஓட்டுவோம், சாலையில் பாதி எதிரில் வரும் வாகனங்களுக்கு விட்டுவிடுவோம், இடையூறு இல்லாத பகுதிகளில் இடது பக்கமாக நிறுத்துவோம், அடிக்கடி சைடு கண்ணாடிகளை பார்த்து செல்வோம், மெயின் ரோட்டில் வரும் வாகனத்திற்கு முன்னுரிமை கொடுப்போம், வாகனத்தை திருப்பும் முன் இண்டிகேட்டர் போடாமல், அல்லது கை சைகை காட்டாமல் வாகனத்தை திருப்பாதிருப்போம், எதிரில் வாகனம் வரும்போது, நேருக்கு நேராக செல்லாதிருப்போம், முன் செல்லும் வாகனத்திற்கு போதிய இடைவெளி விட்டு செல்வோம், மழை பெய்கின்ற நேரங்களில் மெதுவாக செல்வோம், ஓட்டுனர்கள் (பொறுப்புடன், பொறுமையுடன்) மெதுவாகச் செல்வோம். ராங் சைடில் செல்லாதிருப்போம். பாதசாரிகள் மீது கவனம் வைத்து செல்வோம். பாலங்களில் சைடு வாங்காதிருப்போம், மெதுவாகச் செல்ல வேண்டிய இடங்களில் மெதுவாகச் செல்வோம்.

## தவறுகளைத் திருத்திக் கொள்வோம்.

சிக்னல் கொடுக்காமல் நிறுத்துவது மற்றும் திருப்புவதிலிருந்து, சைடு கொடுப்பவர் வலது பக்க இண்டிகேட்டரை போட்டு சைடு கொடுப்பதிலிருந்து, எதிரில் வாகனம் வரும் பொழுது Head லைட்டை Dim செய்யாமல் ஓட்டுவதிலிருந்து, Hazard லைட் (எமர்செனசி நேரங்களில் பயன்படுத்தும் விளக்கு), நேராகச் செல்ல உள்ள இண்டிகேட்டர் என்ற நினைவிலிருந்து, பகல் நேரங்களில் எதிரில் வரும் வாகனம் லைட்டை போட்டால் நிற்க வேண்டும் என்கின்ற எண்ணத்தில் இருந்து, சாலையை மறித்தபடி வாகனத்தை நிறுத்துவதிலிருந்து, இடதுபுறத்தில் சைடு வாங்குவதிலிருந்து.

PRAISE THE LORD JESUS

Behold, I will... do a Marvelous work. Isaiah 29:14 - இதோ, நான்... ஒரு அதிசயத்தை செய்வேன். ஏசாயா 29:14

# MARVELOUS

## CAR DRIVING SCHOOL

## Institute & Technology

33 - Jeeva Nagar, Karaikudi - 33 - ஜீவா நகர், காரைக்குடி.

999 455 3438, 962 962 8005, 99 42 32 62 94, 88 258 28 298

அரசின் புதிய விதிமுறைகளின்படி நமது மாவட்டத்திலேயே முதன் முதலாக உருவாக்கப்பட்டுள்ள எங்களது பயிற்சிப் பள்ளியின் சிறப்பு அம்சங்கள்.....






தன் வேலையில் ஜாக்கிரதையாய் இருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான். நீதி 22: 29

ஜீவனுள்ள தேவன் இயேசு, உங்களையும் உங்கள பிள்ளைகளையும் காப்பார்.

# எங்களது மார்வலஸ் கார் டிரைவிங் ஸ்கூலின் சிறப்பம்சங்கள்


















**999 455 3438, 962 962 8008, 80 154 63906, 88 258 28 298**

**PRAISE THE LORD**

இயேசு ரொம்ப ரொம்ப நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்களேன்.

# MARVELOUS

## CAR DRIVING SCHOOL

## Institute & Technology





சிறந்த முறையில் **CAR** ஓட்டுவதற்கு கற்றுத் தந்து **CAR License** மற்றும்

**Two Wheeler License**ம் பெற்றுத் தருகின்றோம்.















**Name :** ..........................................................................................